# NEWSLETTER

**August 2024**

VIVEKANANDA COMMUNITY FOUNDATION



**Contact Us !**

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.

Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## ஸ்தாபகரின் கல்லூரி விஜயம்



முப்பது ஆண்டுகளாக மகத்தான சேவையை வழங்கி வரும் சமூக நலன்புரி அமைப்பு, கடந்த 12 வருடங்களாக பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை வலுவூட்டியதன் மூலம் சமூக பொருளாதார மாற்றத்திற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் விவேகானந்த பூங்கா ஆகியவற்றின் ஸ்தாபகராகிய திரு.கந்தப்பன் சற்குணேஸ்வரன் அவர்கள் இலங்கைக்கான தமது விஜயத்தை மேற்கொண்டிருக்கின்றார்.அந்தவகையில் இங்கு நடைபெற்ற செயற்பாடுகளைப் பார்வையிடும் வண்ணம் விவேகானந்த பூங்காவினைப் பார்வையிட்டதோடு மட்டுமன்றி 12.08.2024 அன்று விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரிக்கான வருகையை அடுத்து சுவாமி விவேகானந்தருக்கான பூஜைகளைத் தொடர்ந்து கல்லூரி வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றது. கல்லூரியின் செயற்பாடுகள் மற்றும் சமூக நலன்புரியமைப்பின் செயற்பாடுகளையும் ஸ்தாபகர் பார்வையிட்டதுடன் கல்லூரி மாணவர்களுடனான கலந்துரையாடலும் இடம் பெற்றது. மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஸ்தாபகரின் அறிமுகம் இடம்பெற்று மாணவர்களுக்கான சமூக மாற்றம் தொடர்பான தெளிவூட்டலும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் வரலாறும் சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டது. விவேகானந்த குடும்பத்தின் சேவையாளர்களால் ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களது தன்னலமற்ற சேவையைப் பாராட்டி நினைவுச்சின்னம் மற்றும் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டமை சிறப்பானதாகும்.







# Top news

## விவேகானந்த பூங்கா திறப்புவிழா




சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க "உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே இருக்கின்றன. நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவன் ஆகிவிடுவாய்" அந்த வகையில் சமூக நலன்புரி அமைப்பு, திலகவதியார் மகளிர் இல்லம் மற்றும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஸ்தாபகர் சமூகதீபம் திரு.க.சற்குணேஸ்வரன் ஐயா அவர்களின் எண்ணங்களின் வலிமையின் வழியே உருவாகிய எமது விவேகானந்த பூங்காவின் திறப்பு விழா சிறப்பாக இடம்பெற்றது.

உலகலாவிய இராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன்களின் தலைவர் அதி வணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் அவர்களின் பரிபூரண ஆசிர்வாதத்துடன் பிரதம அதிதியாக தஞ்சாவூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தஜி மஹராஜ் மற்றும் ஆன்மீக அதிதிகளாக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தஜி மஹராஜ் மற்றும் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தஜி மஹராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி பொது மேலாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்தஜி மஹராஜ், மற்றும் திருவண்ணாமலை ராமகிருஷ்ண ஆசிரமத்தை சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி மாத்ருசேவனாந்தர் ஆகிய சுவாமிஜிகளின் நேரடி ஆசியுடன் ஐயனார் ஆலயத்திலிருந்து அனைவரும் மேள வாத்தியங்கள் இசைக்க சிறுவர் சிறுமிகளின் கோலாட்டங்களுடன் வரவேற்கப்பட்டு பூங்கா வரையிலான நடைபவனி இடம்பெற்று 30 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை மற்றும் நினைவுக்கல் சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் சேவையின் நினைவுச் சின்னமாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள் , சுவாமி ஜீவானந்தஜி, சுவாமி நடராஜானந்தஜி, சகோதரி நிவேதிதா ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் திறந்து வைக்கப்பட்டதோடு ஏனைய துறவிகளின் பெயர்களைத் தாங்கிய 10 இல்லங்களோடு
விவேகானந்த பூங்கா இனிதே திறந்து வைக்கப்பட்டது















இராமகிருஸ்ண மடத்துறவிகள் எமது விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரிக்கான விஜயத்தையும் மேற்கொண்டிருந்ததுடன் எமது அனைத்து செயற்பாடுகளையும் கேட்டறிந்து பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள சீமூன் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் விவேகானந்த பூங்காவிற்கான நன்கொடை வழங்கிய நன்கொடையாளர்களும் கௌரவிக்கப்பட்டதோடு ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் ஐயா அவர்கள் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் உயரிய விருதாகிய ‘‘விவேகானந்த விருது’’ வழங்கப்பட்டு சுவாமிஜிகளால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே விவேகானந்த பூங்காவின் நன்கொடையாளர்கள் மற்றும் விபரங்களை உள்ளடக்கிய ‘‘விஸ்வரூபம்’’ மலர் வெளியீடு இடம்பெற்றமை சிறப்பானதாகும்.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.தட்சிணகௌரி தினேஷ், மண்முனை தென்எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர்.பேராசிரியர்.மா.செல்வராஜா, ஸ்ரீ சத்ய சாயி சஞ்ஜீவனி வைத்திய சாலை வைத்தியகலாநிதி.தி.சுந்தரேசன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.எஸ். புவனேந்திரன், மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திரு.யோ.சர்வேஸ்வரன், சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி திரு.சி.சிவகுமார், பதுளை மலையக சிறுமிகள் இல்லத் தலைவர் திரு.எஸ்.கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலரது பிரசன்னத்துடன் எமது நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் உள்ளிட்ட எமது அமைப்புகளின் முகாமையாளர்கள், இணைப்பாளர்கள், விவேகானந்தத் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள், முல்லைதீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்ல மாணவிகள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் மாணவ மாணவிகள் உள்ளடங்கலாக விவேகானந்த குடும்பத்தினரும் இணைந்து சிறப்பான முறையில் இந்நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது









Manitha Neyam Trust
*Love for Humanity*

## ஸ்மார்ட் வகுப்பறை நிர்மாணம்



மனித நேய நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஒருங்கிணைப்பினூடாக விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியால் நடைமுறைப்படுத்தும் ஒரு செயற்பாடாக ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று உருவாக்கப்பட்டதோடு 27.08.2024 அன்று எமது கல்லூரியின் ஸ்தாபகர்.திரு.சற்குணேஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எமது விவேகானந்த குடும்பத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் உள்ளிட்ட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.
இச்செயற்பாட்டிற்கான நன்கொடை உதவியை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக மனிதநேய நம்பிக்கை நிதியத்தினர் வழங்கியிருந்தமை சிறப்பானதாகும்.

## பெற்றோருடனான கலந்துரையாடல்



பட்டப்படிப்பு ஒன்றை தொடர்வதற்கான வழிகாட்டலையும், அடிப்படைக் கணினி அறிவினையும் வழங்கிடும் 3 மாத கால இலவச பயிற்சிக்கு 20 வறுமைநிலையில் உள்ள ஆர்வமுள்ள மாணவர்களிற்கு புலமைப்பரிசில் மூலம் தொடருதவியினை விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியில் பயிற்சியினை தொடரவிருக்கின்றது. இதற்கான உதவியை மனித நேய நம்பிக்கை நிதியம் உதவி வருகின்றது. கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் தெரிவுசெய்யபட்ட மாணவர்களிற்கு, மனித நேய நிதியத்தின் உதவியுடன் இவ்வருடத்திற்கான 2வது தொகுதி மாணவர்களை இணைத்திடுவதற்கான பயிற்சி பற்றிய தெளிவூட்டலும், அதற்கான பெற்றோருடனான கலந்துரையாடலும் 07.08.2024 அன்று கல்லூரியின் செங்கலடி கிளையில் கல்லூரி பணிப்பாளர், மற்றும் விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் முகாமையாளர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.

## சேவையாளர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சி (TOT)



எமது விவேகானந்த குடும்பத்தின் சேவையாளர்கள் இரண்டு கட்டங்களாகத் தெரிவுசெய்யப்பட்டு 2 குழுக்கள் இந்தியா சென்று வாழ்க்கைத்திறன் பயிற்சி பெற்று வந்ததையடுத்து கிராமங்கள், பாடசாலைகள், கல்லூரி மாணவர்கள் என அனைவருக்கும் வாழ்வியல் விழிப்புணர்வு செயற்பாடுகளும் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அந்தவகையில், எமது சேவையாளர்களுக்கான TOT எமது வளவாளர் குழாத்தினரால் 29.07.2024 முதல் 7 நாள் தொடர்பயிற்சி செயலமர்வாக நடாத்தப்பட்டு 06.08.2024 அன்று இறுதி நாள் காட்சிப்படுத்துதல் இடம்பெற்று நிறைவுபெற்றது.


## ஸ்தாபகரின் சேவையாளர்களுடனான கலந்துரையாடல்






ஸ்தாபகர் திரு.க.சற்குணேஸ்வரன் அவர்களால் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரி விஜயத்தினைத் தொடர்ந்து விவேகானந்த குடும்பத்தினருடான சந்திப்பினை மேற்க்கொண்டிருந்தார். இக்கலந்துரையாடலானது 14.08.2024 அமிர்தா நிறுவனத்தில் இடம்பெற்றது. இதன்போது சேவையளர்களின் அறிமுகமும் நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் நிறைவேற்று பணிப்பாளர் திரு.க.பிரதீஸ்வரன் அவர்களின் தலைமையின் கீழ் நிதிப் பணிப்பாளர் திரு.எஸ்.புருசோத்மன், மற்றும் முகாமைத்துவ உறுப்பினர்கள், ஏனைய சேவையாளர்களும் கலந்து சிறப்பித்தனர். விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் மூன்று நிலையங்களினதும் தொழில்பயிற்சி செயற்பாடுகள், விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் சமூக மாற்ற தன்னார்வ செயல்பாடுகள் பற்றிய விளக்கம் மற்றும் அமிர்தா நிறுவனத்தின் தொழில் விருத்திக்கான செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டது.










## கிராம மாற்றத்திற்கான வலுவூட்டல்

“கிராமங்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல்'' என்னும் தொனிப்பொருளில் தெரிவு செய்யப்பட்ட மாவிலங்கத்துறை கிராமத்தில் அடிப்படைத் தேவையாக உள்ள கல்வி, கலாச்சார, பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில், மாவிலங்கத்துறை கிராமத்துடனான எமது அறக்கட்டளையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்தல் சம்பந்தமாக ஆலோசிக்கும் வகையில் மாவிலங்கத்துறை கிராம சேவையாளர் தலைமையிலான கலந்துரையாடல் அக்கிராமத்தில் 30.08.2024 அன்று இடம்பெற்றது.

மாவிலங்கத்துறை கிராமத்தின் ஆலய தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகக்குழுவினர், மாதர் சங்கம், சமூர்த்தி சங்கம், இளைஞர் கழகம், விளையாட்டுக் கழகம், சுய உதவிக் குழு, கிராமசக்தி சங்கம், முதியோர் சங்கம், மீனவர் சங்கம், சமூக நலன்புரி சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் என அனைத்து குழுத் தலைவர்களும் பொது மக்களும் கலந்துகொண்டதோடு எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்டமுகாமையாளர் உட்பட்ட சமூகப்பணி சேவையாளர்களும் கலந்து கொண்டனர்.

மாவிலங்கத்துறை கிராமத்தில் காணப்படும் தேவைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்களுடன், எமது அடுத்த கட்ட நடவடிக்கை அடுத்து எமது அறக்கட்டளையால் முன்னெடுக்கப்படவிருக்கின்ற செயற்பாடுகளையும் உள்ளடக்கிய ஓர் அறிமுக கலந்துரையாடலாக இடம்பெற்றது.

## கணிணிப் பயிற்சியின் அடுத்தகட்ட நகர்வு

ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாவிலங்கத்துறை கிராமப் பிரதேசத்தில் தொடர்கட்டங்களாக நடாத்தப்பட்டு வந்த கணினி பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வு 09.08.2024 அன்று மாவிலங்கத்துறையில் இடம்பெற்றது. எமது நிறைவேற்றுப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர், மாவிலங்கத்துறை கிராம சேவை உத்தியோகத்தர், ஆலய நிர்வாகத் தலைவருள்ளிட்ட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். பயிற்சியின் இறுதி நிகழ்வைத் தொடர்ந்து அம் மாணவர்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டமை சிறப்பானதாகும். இச் செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **மனித நேய நம்பிக்கை** நிதியத்தினர் தமது நிதி அனுசரணையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





## இரு மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டிகள்



எமது அறக்கட்டளையின் மாணவர்களின் மாற்றத்திற்கான வலுவூட்டல் என்னும் திட்டத்தினூடாக எம்மால் பொறுப்பெடுக்கப்பட்டு மாதாந்தம் ஊக்குவிப்புத் தொகை பெற்றுக்கொள்ளும் இரு மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கப்படும் நிகழ்வானது 23.08.2024 அன்று விவேகானந்தத் தொழில்நுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றதோடு அதற்கான ஆவணங்களும் கைச்சாத்திடப்பட்டு வழங்கிவைக்கப்பட்டது. ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாவிலங்கத்துறை கிராமத்தைச் சேர்ந்த செல்வன். சுசித்திரன் சுகிர்தன் மற்றும் செல்வாநகர் கிராமத்தைச் சேர்ந்த செல்வன்.தினேஸ்குமார் லிதேஸ் ஆகிய இரு மாணவர்களும் தமக்கான துவிச்சக்கரவண்டிகளைப் பெற்றுக்கொண்டனர். விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஸ்தாபகர், விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் திட்டமுகாமையாளர், மாவிலங்கத்துறை கிராம சேவையாளர் உள்ளிட்ட எமது அனைத்து சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எமது பயனாளிகள் இருவருக்கான நன்கொடை அனுசரணையை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையினூடாக **நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் திருமதி.கணேசராணி ரவீந்திரன் அவர்கள்** வழங்கியிருந்தார்.





## சமூக மேம்பாட்டு தொண்டர் படையணி

எமது பசுமைப்புரட்சித் திட்டத்தினூடாக சூழலியல் மாற்றம் ஒன்றினை உருவாக்கும் நோக்கில் கடந்த மாதம் சுற்றாடல் மேம்பாட்டு தொண்டர் படையணி ஒன்று எமது அறக்கட்டளையினால் உருவாக்கப்பட்டது. அதன் அடுத்த கட்ட செயற்பாடாக ஆவணி மாதத்திற்குரிய கலந்துரையாடல் 28.08.2024 அன்று எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது. இதன்போது பிளாஸ்டிக் பாவனையின் தீமைகள் பற்றியும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் பற்றியும் பிரதேச சபையின் சூழல் பாதுகாப்பு இணைப்பாளர் திருமதி.ரஜனி பாஸ்கரன் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.





## உயர்தர மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள்

மட்/கது/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் உயர்தர கணித உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டு செய்ற்றிட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தவகையில் அவர்களுடனான ஓர் கலந்துரையாடல் நிகழ்வானது 30.08.2024 அன்று பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 16 மாணவர்கள் கலந்து கொண்டு அவர்களது கருத்துக்களையும் முன்வைத்ததோடு எதிர்நோக்கிய சவால்கள் பற்றியும் குறிப்பிட்டனர். இச் செயற்பாட்டிற்காக எமது அறக்கட்டளையினூடாக **நியூசிலாந்து நாட்டில் வசிக்கும் திருமதி.கணேசராணி ரவீந்திரன் அவர்கள்** தமது நிதி அனுசரணையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**

விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது. அதனடிப்படையில் ஆவணி மாதத்திற்கான விசேட உணவு வழங்கப்பட்டது.



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

## மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569



- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்



